பக்கங்கள் 17 + 06

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## சீரற்ற காலநிலையால் ஏழு பேர் பரிதாபப் பலி

**45 ஆயிரத்து 344 பேர் பாதிப்பு**

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையால் 7 பேர் பலியாகியுள் ளனர். மேலும் 13 பேர் காயமடைந் துள்ளனர். 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 12 சனிக்கிழமை 25.05.2024 அதிர்வு 299



# அரச நிகழ்வுகளை தேர்தல் பரப்புரை மேடையாக்காதீர்!



## ஜனாதிபதி ரணிலின் முன்னிலையில் வைத்தே இன்றைய நிகழ்வில் சுமந்திரன் இடித்துரைப்பு

"அரச வைத்தியசாலை கட்டடம் திறத்தல், காணி உறுதி வழங்கல் போன்றவை அரசு நிகழ்வுகள். அந்த நிகழ்வு மேடைகளை தேர்தல் பிரசாரத்துக்கான தளமாக்கிக் கொள்ளாதீர்கள்!"

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் வைத்துக் கொண்டு இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று பங்கு பற்றிய இரண்டு நிகழ்வுகளில் உரையாற்றும் போது இடித்துரைத்தார் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். 04▶





## காணாமல்போன மீனவர்களை தேடுகின்றது ஹெலிக்கொப்டர்!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, சல்லிக் கடற்கரையில் இருந்து கடந்த 21 ஆம் திகதி இயந்திரப் படகில் மீன்பிடிக்கச் சென்றபோது காணாமல்போயுள்ள இரண்டு மீனவர்களைத் தேடி இன்று காலை முதல் விமானப் படைக்குச் சொந்தமான 04▶

## ரணில் - விக்கி நேரில் சந்திப்பு



வடக்கு மாகாணத்துக்கு வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய நாடாளு மன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரனை இன்று மாலை நேரில் சந்தித்துப் பேசவுள்ளார் என்று அறியமுடிகின்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள விக்னேஸ்வரனின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது என்று தெரியவருகின்றது.

இதன்போது சமகால அரசியல் விடயங்கள் மற்றும் வடக்கின் தற்போதைய நிலைமை தொடர்பில் இருவரும் பேசுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



### கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட

# மகளிர் சுகாதார சேவைகளுக்கான சிறப்பு நிலையம் ரணிலால் திறப்பு

நாடளாவிய ரீதியில் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் அரச வேலைத்திட்டத்தின் கீழ், நெதர்லாந்து அரசின் நிதியுதவியில் 532 கோடி ரூபா செலவில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட மகளிர் சுகாதார சிறப்பு நிலையம் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவால் இன்று முற்பகல் திறந்து வைக்கப்பட்டது .

2006 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி மாவட்டத்தில் சுகாதார வசதிகளை வழங்கும் பிரதான வைத்தியசாலையாகும். இந்த வைத்தியசாலை மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களுக்குச் சுகாதார வசதிகளை வழங்கி வருகின்றது.



இன்று திறந்து வைக்கப்பட்ட மகளிர் சுகாதார சேவைகளுக்கான சிறப்பு மையம், வடக்கில் தாய் மற்றும் பிறந்த குழந்தைகளின் பிரசவத்தை மேம் படுத்துவதுடன், புதிதாகப் பிறந்த பெண்கள் மற்றும் அவர்களது குடும் பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் வடக்கு மாகாண சுகாதார அமைப்பை வலுப்படுத்தும் என்று ஜனாதிபதி ஊடகப்

(03ஆம் பக்கம் பார்க்க)











# மகளிர் சுகாதார சேவைகளுக்கான சிறப்பு நிலையம் ரணிலால் திறப்பு

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவு தெரிவித்துள்ளது.

பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து, மகளிர் சுகாதார சேவைகளுக்கான சிறப்பான நிலையத்தைத் திறந்து வைத்த ஜனாதிபதி, அதன் செயற்பாடுகளை அவதானிப்பதிலும் இணைந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், இலங்கைக்கான நெதர்லாந்தின் தூதுவர் போனி ஹோபேக், முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பிரதேச அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், மதகுருமார்கள், பிரதேச மக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.











# ஜனநாயக மக்கள் முன்னணியின் கேகாலை மாவட்ட மாநாடு நாளை

## மனோ எம்.பி. தலைமையில் எட்டியாந்தோட்டையில்

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணியின் கேகாலை மாவட்ட மாநாடு, நாளை எட்டியாந்தோட்டை நகரில், ஸ்ரீவிநாயகர் ஆலயத்துக்கு எதிரே, கே.ஜி .எல். குணவர்த்தன மண்டபத்தில், கட்சித் தலைவர், கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

கூட்டணியின் பிரதித்தலைவர்களான பழனி திகாம்பரம் எம்.பி., வே. இராதாகிருஷ்ணன் எம்.பி., கேகாலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பிரமுகர்களான கபீர் ஹசீம் எம்.பி., சுஜித் சஞ்சய் பெரேரா எம்.பி., ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் எம். வேலுகுமார் எம்.பி. ஆகியோர் உட்பட கட்சி, கூட்டணி அரசியல் குழு உறுப்பினர்கள், விசேட அழைப்பாளர்கள், மாவட்ட கட்சி அங்கத்தவர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொள்வார்கள்.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஜனநாயக மக்கள் முன்னணியின் கேகாலை மாவட்ட அமைப்பாளர் பரணீதரன் முருகேசு பொறுப்பெற்றுள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கேகாலை மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பிரதேச செயலக வலய, தோட்டப் பிரிவு வலய, நகர வலய அமைப்பாளர்களின் தலைமையிலான செயற்குழு உறுப்பினர்கள் அடங்கிய முழு மாவட்டம் தழுவிய கட்டமைப்பு மாநாடாக இந்த நிகழ்வு, "ஒன்றிணைந்து வெல்வோம்! தேசிய அரங்கில் இடம் பெறுவோம்!" என்ற தொனிபொருளில் நடைபெறும் என்று பரணீதரன் முருகேசு தெரிவித்துள்ளார்.

# பேசாலையில் வாள் வெட்டு; ஒருவர் வைத்தியசாலையில்

(எஸ்.ஆர். லெம்பேட்)

மன்னார் - பேசாலை பொலிஸ் பிரிவுக்கப்பட்ட முருகன் கோயிலடி, 7ஆம் வட்டாரப் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலத்த காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வாள்வெட்டுச் சம்பவத்தில் காயமடைந்தவர் அதே ஊரை சேர்ந்த 38 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் பேசாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பவ தினம் வாள், கத்தி, இரும்புக் கம்பிகளுடன் 15 இற்கும் மேற்பட்ட நபர்கள் வந்தார்கள் என்றும், அவர்கள் கடும் போதையில் இருந்தார்கள் என்றும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அரச நிகழ்வுகளை...

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட மகளிர் சுகாதாரம் பேணலுக்கான சிறப்பு மையம் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் திறந்து வைக்கப்பட்டது.

இதே சமயம் பொதுமக்களுக்குக் காணி உறுதிப் பத்திரம் வழங்கும் உறுமய நிகழ்வும் இரணைமடுவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இன்று நடைபெற்றது.

இந்த இரண்டு நிகழ்வுகளிலும் ஜனாதிபதி முன்னிலையில் உரையாற்றிய சுமந்திரன் எம்.பி. அங்கு கூறிய முக்கிய விடயங்களின் சாராம்சம் வருமாறு:-

"இவை அரசு நிகழ்வுகள். இங்கு பலரினதும் உரைகள் இவற்றைத் தேர்தல் பிரசார மேடையாக்கும் போக்கில் தென்படுவது மன வருத்தத்துக்குரியது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைத் தேசிய வைத்தியசாலையாக மாற்றும் ஜனாதிபதியின் அறிவிப்பை வரவேற்கிறோம். ஏற்கனவே அது போதனா வைத்தியசாலை என்ற முறையில் மத்திய அரசுக்குக் கீழேயே உள்ளது. அதை மத்திய அரசு கையாள்வது வரவேற்கத்தக்கதே.

ஆனால், கல்வியும் சுகாதார வைத்தியத்துறையும் மாகாணத்துக்குப் பகிரப்பட்ட விடயங்கள். தேசிய பாடசாலை என்ற பெயரில் பாடசாலைகளை மத்திய அரசின் கீழ் மாற்றுவது, வைத்தியசாலைகளை நேரடியாக மத்திய அரசு நிர்வாகத்தின் கீழ் எடுப்பது எல்லாம் தவறானவை. அவற்றைச் செய்யாதீர்கள்.

காணி உறுதிப் பத்திரம் மக்களுக்கு வழங்கப்படுவதை வரவேற்கின்றோம். ஆனால், 13ஆவது திருத்தத்தின் கீழ் காணி அதிகாரங்கள் மாகாணங்களுக்குரியவை. அதனை உயர் நீதிமன்றமும் ஒரு தீர்ப்பில் அங்கீகரித்திருந்தது. எனினும், அந்தத் தீர்ப்பைச் செல்லுபடியற்றதாக்கும் தவறான தீர்ப்பு ஒன்றை அதன் பின்னர் அதே நீதிமன்றம் வழங்கியுள்ளது.

அந்தத் தவறான தீர்ப்பைப் பயன்படுத்தி மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட காணி அதிகாரங்களை மத்திய அரசு கையாளக்கூடாது. காணி உறுதிகள் மக்களுக்கு வழங்கும் நடவடிக்கை கூட மாகாணக் கட்டமைப்புகள் மூலமே முன்னெடுக்கப்பட வேண்டும்." - என்றார்.

### சீரற்ற...

18 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் 12 ஆயிரத்து 197 குடும்பங்களைச் சேர்ந்த 45 ஆயிரத்து 344 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

12 வீடுகள் முழுமையாகவும், 2 ஆயிரத்து 797 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன.

### காணாமல்போன...

ஹெலிக்கொப்டர் தேடுதலை ஆரம்பித்துள்ளது.

ஆழ்கடலை இந்தத் தேடுதல் நடவடிக்கையில் கடற்படை அதிகாரி ஒருவரும் இணைந்துள்ளார் என்று கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சு கூறியுள்ளது.

சீரற்ற காலநிலையால் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் வெற்றி பெறாத நிலையில் தற்போது விமானப்படையின் உதவி பெறப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. சல்லியைச் சேர்ந்த குட்டிராசா சசிக்குமார் (வயது 44), முருகயா சுயாந்தன் (வயது 32) ஆகிய இரு மீனவர்களே காணாமல்போயுள்ளனர்.

# காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு திருகோணமலையில் மாவட்ட மன்றம்



(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தில் நீண்ட காலமாக நிலவிவரும் காணிப் பிரச்சினைகளைத் தீர்த்தல், மாற்றுக் காணிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பவற்றை அடிப்படையாக கொண்டு "நிலையான உட்கட்டமைப்புக்கான சமூக மன்றத்தின்" திருகோணமலை மாவட்ட மன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

திருகோணமலை குளக்கோட்டன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிலையான உட்கட்டமைப்புக்கான கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் சமந்த அபேவிக்கிரம, ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர் பிரியங்கர கொஸ்தா ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்ட குழுவையும் ஆரம்பித்து வைத்தனர்.

நிலையான உட்கட்டமைப்புக்கான தேசியமன்றமானது,தேசியமீன்பிடிஒத்துழைப்பு இயக்கத்துடன் இணைந்து செயற்படும் தேசிய கட்டமைப்பாகும்.

இதுவரை 5 மாவட்டங்களில் இத்தகைய சமூக மன்றங்கள் உருவாக்கப் பட்டுள்ளது.

திருகோணமலையில் அமைக்கப் பட்ட மாவட்ட மன்றமானது, இரண்டு இணைத் தலைவர்களின் கீழ் இயங்கும்.

இந்த மன்றத்தின் ஊடக பங்காளி அமைப்பாக திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் மன்றம் செயற்படுகின்றது.

திருகோணமலை மாவட்ட விசேட காணி மத்தியஸ்த சபையின் பிரதம மத்தியஸ்தர் எஸ்.கீதபொன்கலன் மன்றத்தின் இணைத் தலைவராக, திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் மன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன் மீனவ, விவசாய, சுற்றாடல்சார் அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர் மற்றும் பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய 15 பேர் கொண்ட நிர்வாக கட்டமைப்பும் உருவாக்கப்பட்டது.

# மாங்குளம் மாதர் கிராம சங்கத்தால் முதியவர்களுக்கு உலர் உணவுகள்



(எம்.எம்.றம்ஸீன்)

மாங்குளம் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட அன்றாட உணவுக்கு அல்லல்பட்டு தனிமையில் வாழும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருமுறிகண்டி, கனகராயன்குளம், ஓமந்தை, ஒலுமடு, வன்னிவிளாங்குளம், மாங்குளம், ஒட்டுசுட்டான், கிழவன்குளம், பனிக்கன்குளம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 45 முதியோர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா பெறுமதியில் உலர் உணவு பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த தார்மீக சேவைக்காக லண்டன் ஓம் சரவணபவ சேவா அறக்கட்டளை அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சுமந்திரனின் உரை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு விஜயம் அரசியல் குழப்பங்களை உசுப்பேத்தி விட்டிருக்கின்றது.

அதுவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் வைத்துக்கொண்டு, அவரைப் மெச்சும் விதத்தில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சித்தார்த்தனும் சுமந்திரனும் ஆற்றிய உரைகள் தமிழ்த் தரப்புகளில் பிரதான பேசுபொருள்களாகி இருக்கின்றன.

ஜனாதிபதி பங்குபற்றிய நிகழ்வில் தாமும் பங்குபற்றியமையை நியாயப்படுத்தும் விதத்தில் தமது முகப்புத்தகத்தில் குறிப்பு ஒன்றைப் பதிந்திருக்கிறார் சுமந்திரன்.

''எனது தேர்தல் மாவட்டத்தில் நிகழும் அரச நிகழ்வுகளில் நான் பங்குபற்றுவது ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக ஆதரிக்கும் (அல்லது நிராகரிக்கும்) செயல் அல்ல'' என்று சுமந்திரன் விளக்கி இருக்கிறார்.

சுமந்திரன் அந்த நிகழ்வுகளில் பங்குபற்றுகின்றமை அல்ல சர்ச்சை. அதை யாரும் பெரிய சர்ச்சையாகப் பார்க்கவில்லை. அந்த நிகழ்வுகளில் சுமந்திரன் ஆற்றிய உரைகள் என வெளியான விடயங்கள்தான் சர்ச்சைகளைக் கிளப்பி விட்டிருக்கின்றன.

சுமந்திரனின் உரையில் இரண்டு அம்சங்கள் அவதானிக்கத் தக்கவை.

ஒன்று - ரணிலுக்கு அவர் புகழாரம் சூட்டியமை.

அடுத்தது - 2005 ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அவர் வெளியிட்ட கருத்தியல்.

நேற்று நடந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வடக்கின் மீது அதீத ஈடுபாடு என்றும், அதனால்தான் அவர் அடிக்கடி வடக்கே வருகின்றார் என்றும் ஓர் அரச அலுவலர் அங்கு பேசிய கருத்தியலை ஒட்டித் தாம் கருத்து வெளியிடும்போதே சுமந்திரன் ஜனாதிபதி ரணிலின் வடக்குக்கான சேவைகளை விதந்துரைத்திருக்கின்றார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற நாள் முதல் அவரை அதிகம் வைது வந்த தமிழ் தலைவர்களில் சுமந்திரனும் ஒருவர். பின் கதவால் வந்து அந்தப் பதவியை ரணில் விக்கிரமசிங்க ஏற்றமை சின்னத்தனமான வேலை என்று விமர்சித்தவர் - விமர்சிப்பவர் - சுமந்திரன்.

அத்தகையவர், ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலம் முதல் வடக்கு கிழக்கின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வந்திருக்கிறார் என்று இப்போது சிலாகிக்கின்றமை வித்தியாசமாகப் பார்க்கப்படும். பார்க்கப்படுகின்றது.

ஒருவகையில் சுமந்திரன் கூறியமை உண்மைதான். ஆயினும் அதை அவரே இப்போது வடக்கில் வைத்து ஏன் குறிப்பிட வேண்டும் என்று ஒரு கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது.

வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தெற்கின் மூன்று பிரதான வேட்பாளர்களையும் தமிழர் தரப்பு சம தூரத்தில் வைத்து நோக்க வேண்டிய காலகட்டம் இது என்று சுமந்திரன் அண்மைக்காலத்திலும் வலியுறுத்தி வந்திருக்கிறார்.

தேர்தல் வரும் போது முடிவு கட்டலாம். அதுவரை மூவரையும் சம தூரத்தில் வைத்திருக்கும் அவரின் கருத்தியலின் நிலைப்பாடாக அவரது உரையை நாம் பார்க்கலாம்.

அத்தகைய நிலைப்பாடு எடுக்கும் காலத்தில், மூவரையுமோ அல்லது அவர்களில் ஒருவரையோ காட்டமாக விமர்சிப்பது அந்த நிலைப்பாட்டுக்கு மாறானது என சுமந்திரன் கருதி இருக்கக் கூடும்.


ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசநாயக்க யாழ் வந்த போதும் சுமந்திரன் சென்று அவரைச் சந்தித்திருந்தார். இப்போது ரணில் வந்திருக்கின்ற போதும் அதே பாணியை கடைப்பிடிக்கின்றார். நாளை சஜித் வரும் போதும் அதையே அவர் செய்வார் என எதிர்பார்க்கலாம்.

2005 ஜனாதிபதி தேர்தலில் வடக்கு - கிழக்குத் தமிழர்கள் நடந்து கொண்ட விதத்தை ஒட்டிய சுமந்திரனின் பேச்சையும் போக்கையும் அவர் சொல்லாடலில் நோக்க வேண்டும்.

அப்போது நடந்து கொண்டமையை இப்போது தமிழர்கள் வருத்தத்துடன் நினைவு கூர்வார்கள் என்ற நினைவூட்டல், இன்னொரு தடவை தமிழர்களை அவர்களே வருத்தம் அடையும் போக்கை கைக்கொள்ள வைத்து விடாதீர்கள் என்ற எச்சரிக்கையும் பொதிந்த ஒன்றாகவே அர்த்தம் கொள்ள வேண்டும்.

இப்போதைய அரசியல் கள நிலைவரம், 2005 நிலைவரத்தை ஒத்ததுதான் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு குறிப்பால் உணர்த்த முறபடும் நடவடிக்கையாகவே கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி பங்கு பற்றிய இன்றைய கூட்டங்களில் அதிகாரப் பகிர்வு விடயங்களில், பகிரப்பட்ட அதிகாரங்கள் மீளப் பிடுங்கப்படக் கூடாது என்ற எச்சரிக்கையை சுமந்திரன் சுட்டியிருக்கின்றார் என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# அட்டாளைச்சேனை வெசாக் நிகழ்வு!





**(எம்.எப்.நவாஸ்)**

அட்டாளைச்சேனை பிரதேச செயலகமும் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் சம்மேளனமும் இணைந்து நடத்திய இளைஞர்களை போதைவஸ்திலிருந்து பாதுகாப்போம் என்னும் தொனிப் பொருளிலான வெசாக் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலர் இர்பான் வழிகாட்டலில் இடம்பெற்றது.

இந்த விழிப்புணர்வு மற்றும் அன்னதான நிகழ்வு தீகவாவி ரஜமகா விகாரை மற்றும் பரிவர சைத்திய போன்ற விகாரைகளில் வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் தீகவாவி பொதுச் சுகாதார பரிசோதகர், இளைஞர் சேவை அதிகாரி இஸ்மாயில், கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஜஃபர், தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் நிஸான், இளைஞர் சேவை பிரதேச சம்மேளன தலைவர் ரசாத் மற்றும் தீகவாவி கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு








யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலயு பண்பாட்டு பேரவையின் வாராந்த நிகழ்வு நேற்றுக் காலை சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் பஞ்சபுராண ஓதலுடன் ஆரம்பமானது.

தொடர்ந்து செஞ்சொற் செல்வர் செல்வவடிவேலின் மகாபாரதம் தொடர் சொற்பொழிவு இடம்பெற்றது.

இதில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், ஆச்சிரம தொண்டர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Haram NEK 318
Haram NEK 473
Haram NEK 477
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555

# நாளை மார்ச் 12 இயக்கத்தின் மக்கள் மேடை!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட மார்ச் 12 இயக்கத்தின் மக்கள் மேடை நிகழ்வு நாளை 26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காரைதீவில் நடைபெற வுள்ளது.

தூய்மையான அரசியலுக்காகச் செயற்படும் மார்ச் 12 இயக்கத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தியநாதன் தலைமை யில் இந்த நிகழ்வு காரைதீவு பாபா றோயல்ஸ் மண்டபத்தில் காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதற்கென மாவட்டத்தில் உள்ள அரசியல் பிரமுகர்கள் அழைக்கப் பட்டுள்ளனர்.

கிராம ரீதியாக மூவர் இந்த நிகழ் வில் கலந்து கொள்ள அனுமதிக்கப் பட்டுள்ளது.

சமகால அரசியல் தொடர்பில் கலந்துரையாடல் இதன்போது இடம் பெறவுள்ளது.

# திருமலை ஜெயேந்திரனின் நூல் அறிமுக நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருமலை தோமஸ் ஜெயேந்தி ரனின் படைப்பில் உருவான "இலங் கையிலும் அதற்கு அப்பாலும் வரலாறு கண்ட நிகழ்வுகள்" நூல் அறிமுக விழா திருகோணமலை நகர சபை பொது நூலகக் கேட்போர் கூடத்தில் பொது நூலக உதவியாளர் அரசரெட்ணம் அச்சுதன் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது முதன்மை விருந்தி னராகத் திருகோணமலை நகர சபைச் செயலாளர் வெ.இராஜசேகரும், சிறப்பு விருந்தினராக நகர சபைப் பொது நூலக பிரதம நூலகர் ந.யோகேஸ் வரனும் கலந்து கொண்டனர்.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்ப மான நிகழ்வின் வரவேற்புரையை நகர சபைப் பொது நூலக நூலகரான திரு மதி எம்.எல்.றிம்ஸானா நிகழ்த்தினார்.

நிகழ்வில் நூலின் முதற் பிரதியினை திருகோணமலை நகர சபைச் செயலாளர் வெ.இராஜசேகர் பெற்றுக்கொண்டார்.

வாசகர் வட்ட உறுப்பினரான செல்வி தாஹிரா சித்திக் நிகழ்வுகளை தொகுத்து வழங்கியிருந்தார்.

# புத்தளம் தமிழ் ஊடகவியலாளர்கள் சேவையைப் பாராட்டிக் கௌரவிப்பு




(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் தூய தேசத்துக்கான இயக்கத்தின் ஏற்பாட்டில் புத்தள மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்களின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் மர்ஹூம் தம்பி நெய்னா மரிக்கார் ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (23) மாலை இடம்பெற்றது.

முன்னாள் பிரதி அமைச்சரும், புத்தள மாவட்ட முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரும், முன்னாள் புத் தள நகரபிதாவுமான மர்ஹூம் கே.ஏ. பாயிஸின் 3 ஆவது வருட நினைவு தினத்தை முன்னிட்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

புத்தளம் மாவட்டத்தில் இயங்கிவரும் தூய தேசத்துக்கான இயக்கம் இளம் அரசியல்வாதியான இஷாம் மரைக் காரின் ஆலோசனையில் கற்பிட்டி பிர தேசத்தின் தூயதேசத்துக்கான இயக் கத்தின் அமைப்பாளரான ஹஸ்லான் ரஸாக் தலைமையில் இந்த நிகழ்வில் இயக்கத்தின் உறுப்பினர்கள் , சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது புத்தள மாவட்டத் தில் தற்சமயம் ஊடகவியலாளராக தொலைக்காட்சி , அச்சு ஊடகம் மற்றும் இணைய ஊடகம் ஆகியவற்றில் கடமையாற்றும் அனுபவம்மிக்க, இளம் ஊடகவியலாளர்கள் 10 பேர் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌர விக்கப்பட்டனர்.

# ஹெலிக்கொப்டர் விபத்தில் உயிரிழந்த ரைசிக்குப் புத்தளம் மக்கள் அனுதாபம்






(ரஸீன் ரஸ்மின்)

ஹெலிக்கொப்டர் விபத்தொன்றில் அண்மையில் மரணமான ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்காக புத்தளத்தில் வாழும் மக்களும் தமது அனுதாபங்களை தெரிவித்து வருகின்றனர்.

யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எம்.ஐ. இல்யாஸின் தலைமையில் புத்தளம் கலாச்சார அமைப்பு ஏற்பாடு செய்த அனுதாபக் கையொப்பங்களை பெறும் செயற்றிட்டமொன்று புத்தளம் நுஹ்மான் மண்டபத்தில் இடம்பெற்றது.

நேற்று (24) காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இந்த கையொப்பம் பெறும் நிகழ்வு இடம்பெற்றது.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம், புத்தளம் நகர சபை முன்னாள் உறுப்பினர் ஜமீனா இல்யாஸ், ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரும், உயர்பீட உறுப்பினருமான சப்வான் சல்மான், புத்தளம் தொகுதி அமைப்பாளர் எப்.எம்.றாபி உட்பட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், உலமாக்கள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள், இளைஞர், மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்துகொண்டு தமது அனுதாப குறிப்பினை பதிவு செய்து கையொப்பங்களை பதிவிட்டனர்.

இவ்வாறு பெறப்படுகின்ற இந்தக் கையொப்பங்களை இலங்கையில் உள்ள ஈரான் தூதுவர் ஆலயத்தின் ஊடாக ஈரான் நாட்டின் பதில் ஜனாதியின் அலுவலகத்துக்குப் பாரப்படுத்த உள்ளனர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி மர்ஹூம் ரைசி இலங்கையில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கு உதவியாக இருந்தது செயற்பட்டவர்.

இலங்கைக்கும், ஈரானுக்கும் இடையில் நீண்டகால நல்லுறவு பேணப்படுவதாவும், இந்த பின்னணியிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எம்.ஐ.இல்யாஸ் தெரிவித்தார்.

# கற்பிட்டியில் நடைபெற்ற பெரஹர நிகழ்வு





(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி பௌத்த தேவாலயத்தின் புதிய விகாரை நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட நிகழ்வும், வெசாக் பண்டிகையை முன்னிட்டு பெரஹர நிகழ்வும் நேற்று (24) இரவு இடம்பெற்றன.

பல வருடங்கள் பழமைவாய்ந்த கற்பிட்டி பௌத்த விகாரை புதிதாக நிர்மாணிக்கப்பட்டு பெருந்திரளான மக்கள் மத்தியில் தூபிக் கலசம் வைக்கப்பட்டு அந்த விகாரை மக்கள் பாவனைக்காக திறக்கப்பட்டது.

அத்துடன் புனித வெசாக் பண்டிகையை முன்னிட்டு கற்பிட்டி பிரதான வீதியின் ஊடாக யானை ஊர்வலத்துடன் கற்பிட்டி நகரை பெரகரா நிகழ்வும் அலங்கரித்திருந்தது.

இந்த நிகழ்வில் கற்பிட்டி பிரதேசத்தில் வாழும் மக்கள் கலந்து கொண்டனர்.

நேற்று (24) மாலை கற்பிட்டி பிரதேச சபையின் ஏற்பாட்டில் , பிரதேச சபையினுடைய செயலாளர் மங்கள ராமநாயக்க தலைமையில் வெசாக் தின விசேஷ சவ்வரிசிக் கஞ்சி அன்ன தானமும் வழங்கப்பட்டது.

# மக்களின் பாவனைக்கு உதவாது துருப்பிடித்து அழியும் அரங்குகள்



(எம்.எம்.றம்ஸீன்)

கல்முனைக்குடி மற்றும் சாய்ந்தமருது பகுதிகளிலுள்ள கடற்கரை பிரதேங்களிலுள்ள விளையாட்டு மைதானங்களில் அமைக்கப்பட்ட பார்வையாளர் அரங்குகள் மக்களின் பாவனைக்கு உதவாத வகையில் துருப்பிடித்து அழிந்து வருகின்றன.

அனுபவமுள்ள விளையாட்டு அதிகாரிகள் மற்றும் துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறாமல் பிரதேச இளைஞர்களை திருப்திப்படுத்துவதற்காக முன்னாள் விளையாட்டுத்துறை பிரதியமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரீஸின் நிதிப்பங்களிப்போடு கட்டி முடிக்கப்பட்ட இந்த பார்வையாளர் அரங்குகள் பொதுமக்களின் பாவனைக்கு கையளிக்கப்படாத நிலையிலேயே துருப்பிடித்து அழிந்து வருகின்றன என்று விசனம் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை கல்முனை சந்தாங்கேணி விளையாட்டு மைதானம் கட்டாக்காலி மாடுகள் தங்குமிடமாக மாறியுள்ளது. விளையாடுவதற்கு பொருத்தமற்றதாகவும் காணப்படுகின்றது.

சந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தில் பலவருடங்களாகியும் பூர்த்தியடையாத நிலையில் நீச்சல் தடாகமொன்று புற்கள் வளர்ந்து பற்றைக் காடாகக் காணப்படுகின்றது.

தற்போது கடற்கரைப் பிரதேசத்தில் பலத்த காற்று வீசுவதால் பார்வையாளர் அரங்கின் துருப்பிடித்த கூரைத் தகடுகள் அருகிலுள்ள குடியிருப்பாளர்கள் மீது தூக்கி வீசப்படலாம் என்ற அச்சமும் பிரதேசவாசிகளிடம் நிலவுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனர்த்தமொன்று நிகழ்வதற்கு முன் பொதுமக்களை பாதுகாக்குமாறு கேட்டுள்ளனர்.

# வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட நீர்ப்பாசன கட்டமைப்புகள் புனரமைக்கும் பணிகள்

## பார்வையிட்டார் ஹரீஸ் எம்.பி.



(நூருல் ஹுதா உமர்)

இவ்வருட ஆரம்பத்தில் அம்பாறை மாவட்டம் பலத்த வெள்ளப் பெருக்கைச் சந்தித்தது. இதனால் விவசாய நீர்ப்பாசன கால்வாய்கள், அணைக்கட்டுகள் பாரிய சேதமடைந்தன.

இந்த விடயத்தை ஜனாதிபதி, விவசாய அமைச்சர், நீர்ப்பாசன அமைச்சர் ஆகியோரை சந்தித்து நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் விளக்கினார். அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ள விவசாயிகளின் நன்மை கருதி உடனடியாக அணைக்-கட்டுக்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைத்திருந்தார்.

அது தொடர்பில் முன்னேற்றங்கள் பற்றி ஆராயும் கள விஜயமொன்றை எச்.எம்.எம். ஹரீஸ் எம்.பி. மேற்கொண்டார்.

அவர் சம்மாந்துறை பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் வேல்கஜனிடம் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும், வீரையடி, செங்கல்பட்டு அணைகளின் நிலைகள் மேலும் பாதிப்புக்குள்ளாகியுள்ள ஏனைய அணைகளின் நிலைகள் தொடர்பிலும் கேட்டறிந்தார்.

அதிகமாகப் பாதிக்கப்பட்ட அணைகளை நீர்ப்பாசனத் திணைக்களம் 90 சதவீதமளவில் சீரமைத்துள்ள விடயங்களையும் பார்வையிட்டார்.

இன்னும் மீதமாக உள்ள வேலைகளை அவசரமாக முன்னெடுக்க தேவையான நிதியை நீர்ப்பாசன அமைச்சரிடம் பேசி பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும், சம்மாந்துறை பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் முன்வைத்த விவசாயிகளின் ஏனைய பிரச்சினைகளை தீர்க்க விவசாய அமைச்சருடனும், பொறுப்புவாய்ந்த அமைச்சின் அதிகாரிகளுடனும் பேசி உடனடி நடவடிக்கை எடுப்பார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் உறுதியளித்தார்.

இதன்போது வட்டவிதானை ஏ.எல். தஸ்லீம், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் நௌபர் ஏ. பாவா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## வடமராட்சி - ஒப்பரேஷன் லிபரேஷன்:

# துயர் படிந்த மண்ணின் வரலாற்றை பதிந்த நாள்கள்!

**- நவீனன் -**

1987 மே மாதம் 26 ஆம் நாளில் யாழ் குடா நாட்டில் “ஒப்பரேஷன் லிபரேஷன்” நடவடிக்கை இடம் பெற்றது. வடமராட்சியில் ஆரம்பமாகிய இந் நடவடிக்கை இலங்கை இராணுவத்தால் 1987 ஆம் ஆண்டு மே, ஜூன் மாதங்களில் நிகழ்ந்தது.

அச்சமயம் போராளிகளின் கட்டுப்பாட்டிலிருந்து யாழ். குடாநாட்டில் அமைந்துள்ள வடமராட்சியைக் கைப்பற்றும் நோக்கில் வலிந்த தாக்குதலாகும்.

வடமராட்சி பிரதேசத்தில் 1987 ஆம் ஆண்டு மே மாதம் இறுதியில் நடைபெற்ற லிபரேசன் ஒப் பரேசன் வன்செயல் நடவடிக்கையின் போது பல நூறு அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். வடமராட்சி சோகங்களின் அதி உச்சங்களை சுமந்த மண்ணா கும். ஆயினும் வீரத்தின் வித்துக்களையும் பிரச வித்த மண்ணும் இதுவாகும்.

பிரித்தானியர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலை அடைந்த பின்னர் இலங்கை இராணு வம் மேற்கொண்ட முதல் மரபுப் போர் இதுவாகும்.

இந்த நடவடிக்கைக்கு பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவ, கேர்னல் விஜய விமலரத்ன இலங்கை இராணுவத்தை வழிநடத்தியதோடு அப்போ தைய இலங்கை சனாதிபதி ஜே. ஆர். ஜயவர் தனா, பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஆகியோர் அரசியல் தலைமைத்துவத்தையும் வழங்கியிருந்தனர்.

1987 மே 27 இல் விடுதலைப் புலிகளிடம் இருந்து விடுவிக்கும் இராணுவ நடவடிக்கை எனப் பொருள்படும் ஒப்பரேஷன் லிபரேஷன் நடவ டிக்கை இலங்கை இராணுவத்தால் நடத்தப்பட் டது.

5 நாள்கள் நீடித்த இராணுவத்தரப்பில் இந்த நடவடிக்கை கொப்பேகடுவ வழிகாட்டலில் இந்த அப்பாவித் தமிழர்களை வீடுகளில் இருந்து விரட்டி அடிக்கும் இனவாத நடவடிக்கையாக அமைந்தது.

இந்த இராணுவ நடவடிக்கை மூலம் பலாலியில் இருந்து வெளிவந்த இராணுவத்தினர் வசாவிளான்,



குரும்பசிட்டி போன்ற பகுதிகளில் முன்னேறினர். இந்த இராணுவ நடவடிக்கை மூலம் பெருந்தொகை மக்கள் இடம்பெயர்ந்தனர். இதில் பெரும்பாலான தமிழர்களின் வீடுகள் எவ்வித காரணமும் இன்றி புல்டோசர்கள் மூலம் இடிக்கத்தழிக்கப்பட்டன.

பல அப்பாவித் தமிழர்களின் பூர்விகப் பிர தேசங்களைப் பலாத்காரமாகப் பறிமுதல் செய்து



பலாலி விமான நிலையமும் விஸ்தரிக்கப்பட்டது. இன்றும் இப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந் தவர்கள் மீளத்திரும்புவதற்கான உரிமைகள் மறுக் கப்படுகின்றது. இந்த நடவடிக்கையில் ஏறத்தாழ 40,000 பொது மக்கள் பாதிக்கப்பட்டனர்.

இந்த இராணுவ நடவடிக்கை மூலம் அப்பாவி இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி களே இலங்கைத் தமிழர்கள் இந்தியாவின் தலையீடு வேண்டும் எனக் கோரக் காரணம் ஆயிற்று. இந்த இராணுவ நடவடிக்கை அடுத்தே 1987 இல் இந்திய அமைதி காக்கும் படை இலங்கை வந்தது.

1987 இற்கு முற்பட்ட காலப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவம் அவர்களின் முகாம்களுக்குள் ளேயே தமிழர் இயக்கங்களால் முடக்கி வைக்கப்பட்டி ருந்தனர். தொண்டமானாறு, வல்வெட்டித்துறை இராணுவ முகாம்கள் ஊடாக முன்னேறிய ஸ்ரீலங்கா இராணுவத்தினர், வடராட்சிப் பிரதேசத்தையே ஆக்கிரமித்தனர்.

இந்த இராணுவ நடவடிக்கை வடமராட்சியுடன் இடை நிறுத்தப்பட்ட போதும் இந்த இராணுவ நட வடிக்கையின் நோக்கம் முழு யாழ்ப்பணத்துக்கும் ஆனதாகக் கருதப்படுகின்றது.

1987 மே இறுதியில் வடமராட்சியில் நடந் தேறிய ‘ஒப்பரேசன் லிபரேசன்’ நினைவுகள் மிகக் கொடூரமானது. கோரமானது, துன்பங் களின் சுவடுகள் இன்னும் அங்கே பதிக்கப்பட்ட வையாக உள்ளன. பிரித்தானியர் ஆட்சியில் இருந்து இலங்கை விடுதலை அடைந்த பின்னர் இலங்கை இராணுவம் மேற்கொண்ட முதல் மரபு வழிப் போர் இதுவாகும். இந்த நடவடிக்கைக்கு பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவ, கர்னல் விஜய விமல ரத்ன ஆகியோர் இலங்கை இராணுவத்தை வழி நடத்தியதோடு அப்போதைய இலங்கை ஜனாதி பதி ஜெ. ஆர். ஜயவர்தனா, பாதுகாப்பு அமைச் சர் லலித் அத்துலத் முதலி ஆகியோர் அரசியல் தலைமைத்துவத்தையும் வழங்கியிருந்தனர்.

நாளைய சந்ததி இந்த வரலாறுகளை மறக் காமல் இருக்கவும், வரலாற்றின் துயர் படிந்த நாள்களை மீள நினைவு கொள்வதும் தமிழ் மக் களின் கடமையாகும். வடமராட்சியில் நடந்தேறிய ‘ஒப்பரேசன் லிபரேசன்’ துயர் படிந்த நாள்களை வரலாற்றுத் தடங்களில் பதித்ததில் “கல்லறை மேலான காற்று” எனும் கவிதை தொகுப்பு ஒரு சான்றாகும்.

தொடர்ச்சி▼

# துயர் படிந்த மண்ணின் வரலாற்றை பதிந்த நாள்கள்!

**தொடர்ச்சி▲**

காற்றுக் கூட அனலாக வீசிக்கொண்டிருந்த 1987 காலகட்டம். அவ்வேளையிலும் விடியலை நோக்கிய எழுச்சியில் சண்டமாருதமாய் எழுந்து நின்ற இளங் கவிஞர்களின் படைப்பே "கல்லறை மேலான காற்று" எனும் கவிதை தொகுப்பாகும். ஐந்து நாள்கள் நீடித்த இராணுவத் தரப்பில் இந்த நடவடிக்கை கொப்பேகடுவ வழிகாட்டலில் இந்த அப்பாவித் தமிழர்களை வீடுகளில் இருந்து விரட்டி அடித்த நடவடிக்கையாக அமைந்தது. இந்த நடவடிக்கை மூலம் பெருந்தொகை மக்கள் இடம் பெயர்ந்தனர்.

இருண்டு போன வடமராட்சி மண்ணின் வாழ்மியத்துக்கு ஒளி ஊட்டுவதற்கு எழுதுகோலை உயர்த்திப் பிடித்த கவிஞர்களின் உள்ளக்குமுறலாய் "கல்லறை மேலான காற்று" சாட்சியம் பெறுகிறது.

ஞானசேகர், குருபரன், அகிலன் திரு, நாடி, இரா. ஜனகன், சடாவதணன், கா.யோ. கிரிதரன், தலவாக்கொல்லை சௌந்தரராஜன் ஆகிய எட்டு வளரும் கவிஞர்களின், நம் மண்ணின் கொடூரமான நிகழ்வுகளை நினைவு கூறும் கவிதைத் தொகுப்பாக மிளிர்ந்தமை இன்னோர் சிறப்பாகும்.

ஈரோசின் மாணவ அமைப்பான மாணவர்




இளைஞர் பொது மன்றத்தால் (GUYS) 1988 இல் வெளியிடப்பட்ட இந்தத் தொகுப்பில் அடங்கிய அனைத்தும் எரிதழல் கவிதைகள். படிப்பவர் நெஞ்சில் உணர்ச்சிப் புயலை எழுப்புகின்றன. இவற்றை எழுதியவர்கள் இளம் வளருங்கவிஞர்கள். அவர்கள் ஈழத் தமிழரின் மானுட வாழ்வை தனித்து நின்று பார்க்காமல், போராடும் மக்கள் மத்தியில் நின்று, அவர்களின் துயர துக்கங்களில் பங்கேற்று, மண்ணின் வாசனையைக் கவிதைகளின் ஒவ்வொரு வரியிலும் காணக் கூடியதாக உள்ளது.

தமிழர்களை பீரங்கிகளுக்கு இரையாக்கி, ஈழ தேசத்தை பிணக் கோலமாக்கி, குண்டுமாரி பொழிந்து கொலைக்கூத்து நடந்தேறிய காலகட்டமது. இனப் பகைமையில் மனித உயிர் மலினமாகிப் போனது. இனவெறியின் வேட்டைக் களமாய் வடமராச்சி மாறிவிட்ட கழிவிரக்க நிலையில், ஒரு கவிஞனின் தீனக்குரல் எழுகிறது.

இனிய வடமராட்சி
மீன்கள் துள்ளும்
கடலலை ஓரம்
பேய்கள் குவியும்
பிணங்களை உருட்டும்
தேடுதல் வேட்டையின் பேரில்
தேவைகளைத் தீர்த்துக்
கொள்ளும்...
சோதனை என்னும் பெயரில்
பெண்களை சுவைத்துப் பார்க்கும்...!

என மனம் கசியும் கண்ணீர்த்துளிகளே இவ்வரிகள்.

மேலும் பல அப்பாவித் தமிழர்களின் பூர்விகப் பிரதேசங்களைப் பலாத்காரமாகப் பறித்து இராணுவ ஆதிக்கம் விஸ்தரிக்கப்பட்டது. இன்றும் பறிமுதல் செய்த இந்தப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மீளத் திரும்புவதற்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கையில் ஏறத்தாழ 40,000 பொது மக்கள் பாதிக்கப்பட்டனர். இந்த இராணுவ நடவடிக்கை மூலம் அப்பாவி இலங்கைத் தமிழர்களுக்கு அதீதமான அநீதிகளே இழைக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட ஈழ மக்கள் வாழ்வின் அவலத்தைச் சொல்லி,

தாயே.. அம்மா!
முடியாது வரலாறு!
முள்வேலிக்கப்பால்
உன் வரலாறு!
நீயே தொடர்ந்து கொள்!..

என ஈழ மக்கள் வாழ்வின் அவலத்தைச் சொல்லி, போரின் கோர முகங்களை உலகுக்குப் பறை சான்றுகிறான் இன்னோர் கவிஞன்.

கல்லறை மேலான காற்று, எக்காலமும் நினைவுகள் அழியாத அனல் வீசும் கவிதைக் கணைகளாகவும், மானுட நேசம் மிகுந்து வரும் தென்றலாகவும் தவழ்கிறது. சண்டமாருதமாகவும் சீறுகிறது.

கல்லறைக்குள்
புதைந்தவர்கள்
ஊமைகளல்ல
விடிவு காண...
சாவை துச்சமென்று
கருதி போராடிய போராளிகள்!

என முழங்குகிறது.

தமிழ் மண்ணில் நிகழ்ந்த இவ் வரலாற்றுப் படுகொலை நிகழ்வை சரித்திரமாக வரைந்த கவிதைகளாகவும் நாம் உணரலாம்.

விமானம்,தரைவழி, மற்றும் கடல்வழித் தாக்குதல்கள் என மும்முனைகளிலும் படையினர் முன்னேறிச் சென்ற வழிகளில் பலநூற்றுக்கும் மேலும் தமிழ் இளைஞர்களையும் கைது செய்து கப்பலில் ஏற்றிப் புதிதாகத் திறக்கப்பட்ட "பூசா" தடுப்பு முகாமுக்கு ஏற்றிச் சென்றனர். அங்கே கொண்டு செல்லப்பட்ட நூற்றுக் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் இதுவரையில் திரும்பவேயில்லை.

அதேவேளை போகும் வழியெங்கும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்ற வேறுபாடுகள் இன்றி, சுட்டும் எரித்தும் படுகொலைகள் செய்யப்பட்டனர்.

இவ்வாறு ஈழத்தமிழர் சாவின் பிடியில் தத்தளித்த நிலையை,

ஆண்டவனும் தோற்றான்
அரச பயங்கரவாதத்துக்கு
மண்ணில் ஒவ்வொரு துகளும்
அந்நியர் கால்களில்
நசுங்கிப் போனதும்
எங்கள் கால்களை இழந்து
எங்கள் முகங்களை இழந்து
எங்கள் பரம்பரையை இழந்து
ஆத்மாவை மாத்திரம்

**தொடர்ச்சி▼**

# துயர் படிந்த மண்ணின் வரலாற்றை பதிந்த நாள்கள்!

தொடர்ச்சி▲

நகத்தின் இடுக்கில் ஒளித்து
இன்று வரையிருப்பதை
எப்படி மறப்போம்?

என்கிறான் இன்னோரு கவிஞன். “கல்லறை மேலான காற்று” அள்ளி எரியும் நெருப்புப் துகள் களின் மீதான வருடல்களின் நெருடலாக உணர்ச்சி ஊட்டுகின்றது.

சர்வாதிகாரம் ஆட்சி செய்யும் மரணத்தின் உலைக்களமாய் ஈழம் உருமாறிய கோரச் சூழலை, ஈழத் தமிழரின் புராதன பெருமை வாய்ந்த கலாச்சார சின்னங்களை அழித் தொழிக்கப்பட்ட குரூரத்தை இன்னொரு கவிதை இப்படி சித்தரிக்கிறது.

கோயில்களையும் தூளாக்கிய
கொடுமை...
கொடுமை...
பயந்தோடி பதுங்கு குழியில்
பயங்கரவாதிகளாக்கப்பட்ட
மழலைகளை மறக்க
மனம் மறுக்கிறது...
மாண்டாண் வெளிகளில்
மண்ணே வெடிமருந்தாக
மணக்கிறது!
முலைப்பாலை குடிப்பதற்குள்
மூச்சை நிறுத்திய
முப்படைத் தாக்குதல்...
தாயை... தகப்பனை...
தமயனை...,
வீட்டு நாயைக்கூட
இழந்தோம்.

என உள்ளம் பொங்க குமுறுகிறான்.

இந்த நூலின் முன்னுரையில் அல்வாய் கலா மணி குறிப்பிடுகையில், வடமராட்சியில் நடந்தேறிய ஒப்பரேஷன் லிபரேஷன் கொடுமைகளின் கோரங்களையும் சிதைவுகளையும் நினைவு கூர்வாகக் கொண்டு வெளியாகும் இக்கவிதைகளை எழுதியவர்கள் இளங்கவிஞர்கள் என்பதும் இத்தனை அழிப்புகளுக்கு மத்தியிலும் அதன் வேகத்துக்கு ஈடுகொடுத்துக் கொண்டு புதியவர்களும் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுவும் நிதர்சனமாகும்.

இந்தக் கவிதைகள் யாவுமே, இராணுவக் கொடுமைகள் எம்மிடம் எவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளன என்பதை வெளிக் காட்டி, வடமராட்சியில் நிகழ்ந்த கொடுமைகளைக் கூறும் வகையிலும் வரலாற்று ஆவணமாகவும் இதற்கு ஓர் இடமுண்டு என்று குறிப்பிட்டுள்ளார்.




# முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை



உச்ச நீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி, முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்டுவது தொடர்பான கேரளாவின் கோரிக்கையை மத்திய அரசு பரிசீலித்தால் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், கேரளாவின் கோரிக்கையை மத்திய அரசு பரிசீலித்தால், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு உள்ளிட்ட சட்ட நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்கும் என மத்திய சுற்றுச்சூழல்த் துறை அமைச்சருக்கு இவ்விடயம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

முல்லைப் பெரியாறு அணை வலுவிழந்து உள்ளதாக காரணம் கூறி, அந்த அணையை இடித்துவிட்டு, புதிய அணை கட்ட கேரள அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

அதேநேரம், நீதிமன்ற உத்தரவின்படி அணையின் நீர்மட்டத்தை உயர்த்தவும், பேபி அணையை சீரமைக்கும் முயற்சிகளிலும் தமிழக அரசு தொடர்ந்து ஈடுபட்டுள்ளது எனவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், மத்திய சுற்றுச்சூழல், வனம், காலநிலை மாற்ற அமைச்சின் கீழ் உள்ள நிபுணர் மதிப்பீட்டு குழுவானது கேரள அரசின் பாசன வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி வாரியத்தின் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் கேரள அரசின் கோரிக்கையை சேர்த்துள்ளமையை வன்மையாகக் கண்டிகின்றோம் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மேலும் தெரிவித்துள்ளார்.

# பிரதமருக்கு கொலை மிரட்டல்: வழக்கு குற்றப்பிரிவுக்கு மாற்றம்



சென்னை புரசைவாக்கத்தில் உள்ள என்.ஐ.ஏ. அலுவலக எண்ணுக்கு கடந்த 22 ஆம் திகதி அழைப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதில், பேசிய மர்ம நபர், ‘24 மணி நேரத்துக்குள் பிரதமர் நரேந்திர மோடியை கொலை செய்து விடுவேன்’ என்று இந்தியில் மிரட்டி இணைப்பை துண்டித்தார்.

இதுகுறித்து கீழ்ப்பாக்கம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். இதில், மத்திய பிரதேச மாநிலத்திலிருந்து மிரட்டல் விடுக்கப்பட்டது முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்தது.

இந்த நிலையில், இந்த வழக்கு சென்னை மத்திய குற்றப்பிரிவு பொலிஸாரின் விசாரணைக்கு மாற்றப்பட்டுள்ளது. அதன்படி அப்பிரிவில் உள்ள சைபர் க்ரைம் பொலிஸார் இரண்டு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிந்து விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

# இந்திய கடலோர காவல் படை சார்பில் தூத்துக்குடி அருகே கடலில் ஒத்திகை



இந்திய கடலோர காவல் படை சார்பில், தூத்துக்குடி அருகே நடுக்கடலில் தேடுதல் மற்றும் மீட்பு ஒத்திகை நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு தூத்துக்குடி கடலோர காவல் படை கட்டளை அதிகாரியான டி.ஐ.ஜி. டி.எஸ்.சவுகான் தலைமை வகித்தார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எல்.பாலாஜி சரவணன், மாநகராட்சி ஆணையாளர் லி.மதுபாலன் முன்னிலை வகித்தனர்.

கடலோரக் காவல் படையில் உள்ள வஜ்ரா, வைபவ், ஆதேஷ், அபிராஜ், அதுல்யா ஆகிய 5 ரோந்துக் கப்பல்கள், ஒரு டோர்னியர் விமானம் மற்றும் ஒரு ஹெலிகொப்டர் ஆகியவை இதில் ஈடுபட்டன.

தூத்துக்குடியில் இருந்து சுமார் 5 கடல்மைல் தொலைவில் ஒரு சரக்கு கப்பலில் தீப்பிடித்த நிலையில், கடலோர காவல் படையின் ரோந்துக் கப்பல் விரைந்து சென்று தீயை அணைப்பது போலவும், கப்பலில் இருந்த மாலுமிகள் பத்திரமாக மீட்கப்படுவது போலவும் ஒத்திகை நடைபெற்றது.

அதேபோல, நடுக்கடலில் விமானம் விபத்துக்குள்ளாகி விழுந்தால், அதில் மீட்புப் பணிகளைக் கையாள்வது குறித்தும் ஒத்திகை நடத்தப்பட்டது. அப்போது மீட்பு படகுகள், கப்பல் மருத்துவமனை உள்ளிட்டவை விபத்து நடந்த பகுதிக்கு விரைந்தன.

மேலும், டோர்னியர் விமானம் தாழ்வாகப் பறந்துசென்று, விபத்தில் சிக்கி கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களை மீட்பதுபோலவும் ஒத்திகை நடைபெற்றது. இதையொட்டி கடலில் வீசப்பட்ட மிதவையில் விபத்தில் சிக்கியவர்கள் ஏறி அமர்ந்து, அதில் உள்ள உணவு, தண்ணீர், மருந்துகளை 3 நாள்களுக்குப் பயன்படுத்தலாம் என விளக்கப்பட்டது.

தொடர்ந்து, கப்பல்கள் செல்ல முடியாத பகுதியில் ரிமோட் கன்ட்ரோல் மூலம் இயங்கக்கூடிய மீட்புப்படகை அனுப்பி, கடலில் தத்தளிப்பவர்களை மீட்பது, ஹெலிகொப்டரில் இருந்து கயிறு கட்டி மீட்பது போன்ற ஒத்திகைகளும் நடைபெற்றன.

# யுத்தத்தை உடனடியாக நிறுத்தவேண்டுமென சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலுக்கு உத்தரவு



ரஃபா மீதான இராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும் என ஐ.நா.வின் சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலுக்கு உத்தரவிட்டுள்ளது.

காசா மீதான தாக்குதல்களை இஸ்ரேல் முன்னெடுத்துவரும் நிலையில், இந்த தாக்குதல்களை இனப்படுகொலையாக அறிவிக்க வேண்டும் என தென்னாபிரிக்கா ஐ.நா.வின் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது.

எனினும் தற்போது பாலஸ்தீன மக்கள் அதிகமாக வசித்து வரும் ரஃபா நகர் மீது இஸ்ரேல் ராணுவ நடவடிக்கை மேற்கொண்டு வருவதனால் அதிக அளவில் மக்கள் உயிரிழக்க வாய்ப்பு உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த நிலையிலேயே ஐ.நா.வின் சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலுக்கு உடனடியாக இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவ நடவடிக்கையை நிறுத்தமாட்டோம் சர்வதேச நீதிமன்றத்திற்கு இஸ்ரேல் பதிலடி




இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு விடுக்கப்பட்டுள்ள சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவு மிகவும் மோசமான விடயம் என இஸ்ரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன், காசாவில் இஸ்ரேல் இனப்படுகொலை செய்வதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் முற்றிலும் தவறானவை என்பதுடன், ரபாவில் போர் இலக்குகள் தொடரும் என இஸ்ரேலிய அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவு ஒழுக்க ரீதியில் அருவருப்பானது என்றும் ஏற்றுக்கொள்ளத் தக்கதான விடயமும் அல்ல எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

எனவே காசா பகுதி முழுவதிலும் இருந்து ஹமாஸ் அமைப்பை ஒழித்துக்கட்டவும், பிணைக்கைதிகளை மீட்கவும் தமது இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என இஸ்ரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# போர் நிறுத்தத்தை விரும்புகின்றார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின்



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், தற்போதைய நிலையில் போர் நிறுத்தத்தை விரும்புகின்றார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய உயர் மட்ட அதிகாரிகளை மேற்கோள்காட்டி ரொய்ட்டர்ஸ் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

உக்ரைனிற்கும், ரஷ்யாவிற்கும் இடையில் தொடர்ந்தும் போர் நீடித்து வரும் நிலையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் அவருக்கு எந்தத் தயக்கமும் இல்லை எனவும் மேற்படி ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

பக்கங்கள் 06

கனடா முரசு

சனிக்கிழமை 25/05/2024

## உணவுப் பணவீக்கம்; ஆய்வறிக்கை வந்தது

ஒன்ராரியோ, மே 25

உணவுத் துறையில் 'அதிகமான நிகர லாபத்தை' சமாளிப்பதற்கான கொள்கைகளை மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும் என்று C2



### ரஃபாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள் குறித்த

# சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்புத்தான் கனடா நிலைப்பாடு என்கிறார் ட்ரூடோ

ஒன்ராரியோ, மே 25

சர்வதேச நீதிமன்றத்தின் அண்மைய தீர்ப்பு, ரஃபாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள் குறித்த கனடாவின் நிலைப்பாட்டுடன் ஒத்துப்போகிறது என்று பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

'கனடாவின் நிலைப்பாடு பல வாரங்களாக தெளிவாக உள்ளது. எங்களுக்கு உடனடி போர்நிறுத்தம் தேவை. ஹமாஸ் ஆயுதங்களை கீழே போட வேண்டும், பணயக்கைதிகள் அனைவரையும் விடுவிக்க வேண்டும், ஆனால் ரஃபாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள் இனியும் இருக்கக்கூடாது' என்று ட்ரூடோ கூறியுள்ளார். C2

# ஹைட்ரஜன் தொழிற்சாலைகள் உருவாக்கத்துக்கு 337 மில்லியன் டொலர்கள் கடனாக வழங்க முடிவு

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 25

பச்சைவீட்டுவாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் போது கிட்டத்தட்ட 300 வேலைகளை உருவாக்கக்கூடிய ஹைட்ரஜன் தொழிற்சாலைகள் மற்றும் எரிபொருள் நிலையங்களின் வலையமைப்பை உருவாக்கும் வென்கூவர் நிறுவனத்தின் திட்டங்களுக்கு கனடா உள்கட்டமைப்பு வங்கி 337 மில்லியன் டொலர்களை கடனாக வழங்கியுள்ளது.

HTEC இன் 900-மில்லியன் டொலர்கள் H2 கேட்வே திட்டமானது பிரிட்டிஷ் கொலம்பிய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன், 20 ஹைட்ரஜன் எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கான



திட்டங்களை உள்ளடக்கியது, அவற்றில் 18 பிரிட்டிஷ் கொலம்பியாவிலும், ஏனையவை அல்பேர்ட்டாவில் அமைக்கப்படவுள்ளன.

பர்னபி, நனைமோ மற்றும் பிரின்ஸ் ஜோர்ஜ் ஆகிய இடங்களில் உள்ள மூன்று புதிய மின்னாற்பகுப்பு ஹைட்ரஜன் உற்பத்தி ஆலைகளால் நிலையங்கள் வழங்கப்படும் என்று அரசாங்க கூட்டுத்தாபனமாக இருக்கும் வங்கி மற்றும் பிரிட்டிஷ் கொலம்பிய அரசாங்கம் என்பன கூறியுள்ளன.

அதே நேரத்தில் 15 தொன் துணை தயாரிப்புஹைட்ரஜனைதிரவமாக்குவதற்கான மற்றொரு கட்டமைப்பும் வென்கூவரின் வட பகுதியில் அமைக்கப்படவுள்ளது.



# லிபரல் இடைநிறுத்திய கெவின் வூங் கன்சர்வேட்டிவ் பக்கம் தாவ விருப்பம்

ஒன்ராறியோ, மே 25

முன்பு லிபரல் கட்சிக்காக போட்டியிட்ட சுயேச்சை நாடாளுமன்ற உறுப்பினர் கெவின் வூங், இப்போது அடுத்த தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சிக்காக போட்டியிட விரும்புவதாகக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொலியேவ் விடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால் கன்சர்வேட்டிவ் கட்சியினர், அவரை நாடாளுமன்றத்தில் தங்களுடன் அமர அனுமதிப்பது குறித்து பரிசீலிக்கவில்லை என்று கட்சியின் செய்தித் தொடர்பாளர் சாரா பிஷர் தெரிவித்துள்ளார்.

செப்டம்பர் 2021இல் தேர்தலுக்கு சில நாள்களுக்கு முன்னர் வூங்கினை கட்சியில் இருந்து இடைநிறுத்துவதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்திருந்தார்.

2021 இல் டொராண்டோ ஸ்டாரின் அறிக்கையில் வெளிவந்த பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டை வெளிப்படுத்தத் தவறியமைக்காகவே லிபரல் கட்சியினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனையடுத்து, நாடாளுமன்றத்திற்கு தெரிவான வூங் சுயாதீனமாக செயற்படத் தொடங்கினார்.

எனினும், குற்றச்சாட்டிற்கு வழிவகுத்த குற்றச்சாட்டுகளை அவர் மறுத்துள்ளார். மேலும் அவை பொய்யானவை என்றும் கூறினார்.




## உணவுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உணவு விலைகளை ஆய்வு செய்யும் நாடாளுமன்றக் குழு தனது அண்மைய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

'உணவு விநியோகச் சங்கிலியில் ஏகபோக மற்றும் தன்னலமற்ற துறைகளில்' இந்த இலாபங்களை நிவர்த்தி செய்வதற்கான வழிகளை அரசாங்கம் ஆராய வேண்டுமென குழு பரிந்துரைத்துள்ளது.

இது விவசாயிகள் மற்றும் நுகர்வோருக்கு விலைகளை உயர்த்துவதாக அந்த குழு குறிப்பிட்டுள்ளது.

மே 23ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், கனடாவில் உணவுப் பணவீக்கம் மற்றும் பாதுகாப்பின்மைக்கான காரணங்கள் குறித்த தனது ஆய்வினை குழு விவரித்துள்ளது,

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்மொழிவுகள் பிணைக்கப்பட்டுள்ளன. சர்வதேச சட்டத்தின்படி அனைவரும் அவற்றைப் பின்பற்றுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உயர் நீதிமன்றம், தெற்கு காசா பகுதி நகரத்தில் தனது இராணுவத் தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு இஸ்ரேலுக்கு உத்தரவிட்ட பின்னர் பிரதமர் ட்ரூடோவின் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.



# மிசிசாகா நகர முதல்வர் தேர்தல்; முதல் கட்ட வாக்களிப்பு ஆரம்பம்

ஒன்ராரியோ, மே 25

மிசிசாகா நகர மேயர் இடைத் தேர்தலுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு நேற்று மே 24ஆம் திகதி ஆரம்பித்தது.

இந்த இடைத்தேர்தலில் நான்கு நகரசபை உறுப்பினர்கள், முன்னாள் நகர முதல்வரின் முன்னாள் கணவர் உட்பட 20 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

நகரசபை உறுப்பினர்களான கரோலின் பர்ரிஷ் ஸ்டீபன் டெஸ்கோ, அல்வின் டெட்ஜோ, டிபிகா டமர்லா ஆகிய நகரசபை உறுப்பினர்கள் இந்த இடைத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

அத்துடன், முன்னாள் நகர முதல்வரின் முன்னாள் கணவர் பிறயன் குரொம்பியும் இந்த இடைத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

நகர முதல்வருக்கான இடைத்தேர்தல் வாக்களிப்பு ஜூன் மாதம் 10ஆம் திகதி நடைபெறுகிறது.

இந்த தேர்தலில் முன்கூட்டிய வாக்குப்பதிவு மே 24, 25 ஆம் திகதிகளில் (நேற்றும் இன்றும்) மிசிசிசாகா சிவிக் நிலையத்தில் நடைபெறுகிறது.

தொடர்ந்து முன்கூட்டிய வாக்குப் பதிவு ஜூன் முதலாம், இரண்டாம் திகதிகளில் மிசிசாகா நகரம் முழுவதும் பல்வேறு இடங்களில் நடைபெறும்.

இந்த தேர்தலில் வெற்றி பெறுபவர் மிசிசாகா நகரின் ஏழாவது நகர முதல்வராக பதவி ஏற்பார்.

மிசிசாகா நகரின் ஆறாவது நகர முதல்வராக பொனி குரொம்பி 2014 முதல் 2024 வரை 10 ஆண்டுகள் சேவையாற்றினார்.

ஒன்ராறியோ மாகாண லிபரல் கட்சியின் தலைவர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர் மிசிசாகா நகர முதல்வர் பதவியில் இருந்து விலகியிருந்தார்.

# போதைப்பொருள் வைத்திருப்பது குற்றமே; மத்திய அரசின் நிலைப்பாட்டுக்கு வரவேற்பு



ஒன்ராரியோ, மே 25

சட்டவிரோத போதைப்பொருள் வைத்திருப்பதை குற்றமற்றதாக்குவதற்கான டொராண்டோவின் நீண்டகாலத் தடையை நிராகரித்தமைக்காக மத்திய அரசாங்கத்திற்கு ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்டு நன்றி தெரிவித்துள்ளார்.

மத்திய அரசாங்கத்தின் போதைப் பொருள்களுக்கு அடிமையாதல் தொடர்பான விவகாரங்களுக்கான அமைச்சர் இந்த திட்டத்தைப் பற்றி ‘ஆழ்ந்த கவலைகளை’ மேற்கோள் காட்டியிருந்தார்.

அத்துடன், நகரின் பொது சுகாதார நிறுவனம் முக்கியமான மாற்றங்களைச் செய்ய மறுத்துவிட்டதாகக் கூறியமைக்கு முதல்வர் நன்றி தெரிவித்துள்ளார்.



# 16 ஹொக்கி வீரர்களைப் பலி கொண்ட விபத்து: ட்ரக் சாரதி இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவார்!





கனடாவில் மிக மோசமான சாலை விபத்துகளில் ஒன்றில், 16 ஹொக்கி வீரர்கள் கொல்லப்பட காரணமான சாரதியை இந்தியாவுக்கு நாடு கடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

கனடாவில் பேரதிர்ச்சியை ஏற்படுத்திய Humboldt Broncos பஸ் விபத்து நடந்து சுமார் 6 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், தற்போது விபத்திற்கு காரணமான சாரதியை நாடு கடத்த முடிவாகியுள்ளது.

கல்கரியில் ஜஸ்கிரத் சிங் சித்து தொடர்பில் குடிவரவு மற்றும் அகதிகள் வாரியம் முன்னெடுத்த விசாரணையின் இறுதியில் இந்த முடிவுக்கு வந்துள்ளனர்.

ஜஸ்கிரத் சிங் சித்து கனேடிய குடிமகன் இல்லை என்பதாலும், மிக மோசமான குற்றத்தை முன்னெடுத்துள்ளமையாலும் அவரை நாடு கடத்துவது உரிய நடவடிக்கை என்றே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியரான ஜஸ்கிரத் சிங் சித்து கனடாவில் நிரந்தர வதிவிட உரிமம் பெற்றுக்கொண்டவர். 2018 ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி 16 பேர்கள் கொல்லப்பட்ட Humboldt Broncos பஸ் விபத்தை அடுத்து, ஆபத்தான முறையில் வாகனம் செலுத்தினார் எனக் குறிப்பிட்டு 8 ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றார்.

Saskatchewan பகுதியில் நடந்த இந்தக் கோர விபத்தில் 13 பேர்கள் காயங்களுடன் தப்பினர். கடந்த ஆண்டு அவருக்கு முழு பரோல் வழங்கப்பட்டது. ஆனால் தற்போது சித்து நாடு கடத்தப்பட உத்தரவாகியுள்ளதால், அது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன.

இந்த நடவடிக்கைகள் மாதங்கள் அல்லது ஆண்டுகள் வரையில் நீளலாம் என்றே கூறப்படுகிறது. கல்கரி பகுதியை சேர்ந்த சித்து லொறி சாரதியாக பணியாற்றி வந்துள்ளார்.


சம்பவத்தன்று கனடா சட்கட்சவன் மாகாணம் திஷ்டெலி பகுதியில் Broncos அணியின் பஸ் மீது இவரது ட்ரக் நேருக்கு நேர் மோதியுள்ளது. Broncos ஜுனியர் ஹொக்கி அணி playoff ஆட்டத்திற்காக சம்பவத்தின் போது நிபாவினுக்கு சென்று கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# உடற்பயிற்சியின் பின் சுருண்டு விழுந்து மரணமடைந்த கனேடியக் கோடீஸ்வரர்!



கனேடிய கோடீஸ்வரரும், கரீபியன் பிரீமியர் லீக்கின் நிறுவனருமான அஜ்மல் ஹசன் கான் மாரடைப்பால் மரணமடைந்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தின்'யடஅ துரஅநசையா-வில் அமைந்துள்ள ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டல் ரிசார்ட்டில் உடற்பயிற்சி மேற்கொள்ளும் போது அவர் சுருண்டு விழுந்தார் எனக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் கடந்த திங்களன்று நடந்துள்ளது. 60 வயதான அஜ்மல் ஹசன் கான் அப்போது தனியாக தங்கியிருந்தார் என்றே தகவல் வெளியாகியுள்ளது.

உடற்பயிற்சி முடித்து வெளியே வந்தவர், ஹோட்டல் ஊழியர்களிடம் மருத்துவ உதவி நாடிய நிலையில், திடீரென்று சுருண்டு விழுந்துள்ளார் என்றே அவரது குடும்ப நண்பர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது அவரது உடலை கனடாவுக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு, உள்ளூர் அதிகாரிகளைத் தாங்கள் தொடர்பு கொண்டுள்ளனர் எனக் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். அஜ்மல் ஹசனின் தாயார் இந்தியாவின் லக்னோவில் உள்ள புகழ்பெற்ற பர்லிங்டன் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

அஜ்மல் ஹசனின் திடீர் மறைவு அவரது குடும்பத்தையும், சமூக மக்களையும் மொத்தமாக உலுக்கியுள்ளது. மூன்று சகோதரர்களில் மூத்தவரான அஜ்மல் ஹசன் ஏநசரள குழும நிறுவனங்களின் நிறுவனர் மற்றும் தலைவராவார்.

கரீபியன் தீவுகளில் ஆண்டுக்கு ஒருமுறை முன்னெடுக்கப்படும் கரீபியன் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரை உருவாக்கவும் நடத்தவும் செய்த பின்னரே, அதிகமாகக் கவனம் பெற்றார்.

இந்திய வம்சாவளி பெற்றோருக்கு நைஜீரியாவில் பிறந்தவர் அஜ்மல் ஹசன். கனடாவில் குடியேறும் முன்னர் அவர் பிரித்தானியாவில் வசித்து வந்துள்ளார். அவரது இறுதிச்சடங்குகள் இன்று சனிக்கிழமை 1.40 மணியளவில் கனடாவின் ஆளைளளைளயரபய பகுதியில் முன்னெடுக்கப்பட இருக்கிறது.




# மதுபான விற்பனைத் தளர்வு ஒன்றாரியோவில் அறிவிப்பு!

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் மதுபான விற்பனை தொடர்பில் அறிவித்தல் வெளியிட்டுள்ளது.

இதன்படி, மதுபான விற்பனை நிலையங்கள் தவிர்ந்த ஏனைய கடைகளிலும் மதுபான வகைகள் விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கோடை காலத்தில் இவ்வாறு மதுபான விற்பனையில் தளர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

மளிகைக் கடைகள் உள்ளிட்ட சில விற்பனை நிலையங்களில் மதுபான வகைகள் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மாகாண முதல்வர் டக் போர்ட் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் கடைகளில் மதுபானங்களை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட உள்ளது.



# சட்டமன்றத்திற்குள் துப்பாக்கியுடன் வந்த அவைத் தலைவரின் போக்கால் பிரச்சினை

## சசகெச்சுவான் முதல்வர் ஸ்கொட் மோ நெருக்கடியில்!

சசகெச்சுவான், மே 25

சசகெச்சுவான் முதல்வர் ஸ்கொட் மோ தமது கட்சியின் அவைத் தலைவர் ஜெர்மி ஹாரிசன் சட்டமன்றத்திற்குள் துப்பாக்கியை கொண்டு வந்த குற்றச் சாட்டில் உண்மை இல்லை என்று மக்களுக்கு பகிரங்கமாக உறுதியளித்த ஒரு வாரத்திற்குப் பிறகு, அது உண்மையில் நடந்தது என்று ஜெர்மி ஹாரிசன் ஒப்புக் கொண்டுள்ளார்.

அதேவேளை, அரசாங்கத்தின் அவைத் தலைவர் பதவியில் இருந்து விலகுகிறார் எனவும் அறிவித்துள்ளார்.

வர்த்தகம் மற்றும் குடியேற்றப் பிரச் சினைகளுக்குப் பொறுப்பான அமைச்சராகவும் ஹாரிசன் இருக்கின்றார்.

அதே நேரத்தில் எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சி இந்த முழு விவகாரமும் மாகாண முதல்வரைப் பற்றி கடுமையான கேள்விகளை எழுப்புகிறது என்று கூறுகிறது.

'தீர்ப்பில் ஏற்பட்ட இந்த தவறுக் காகவும், இந்த ஒரு சந்தர்ப்பத்தில் பிரத மருக்கு ஆலோசனை வழங்காததற் காகவும் நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்' என்று ஹாரிசன் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஊழியர்கள் மீது பாலியல் வன்கொடுமை; ஓஷாவாவில் தமிழர் ஒருவர் மீது வழக்கு!

ஒன்ராரியோ, மே 25

ஊழியர்களை பாலியல் வன்கொடுமை செய்ததாக ஓஷாவா உணவகத்தின் முன்னாள் முகாமையாளரான தமிழர் ஒருவர் மீது வழக் குப்பதிவு செய்யப்பட்டது.

38 வயதான ஜெயராம் சிவஞானசுந் தரம்என்பவர் மீது ஐந்து குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன தெரிவிக்கப்படுகின்றது.

ஓஷாவா நகரை சேர்ந்த இவருக்கு எதிராக மூன்று பாலியல் வன்கொடுமைகள், இரண்டு பாலியல் சுரண்டல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட் டுள்ளன.

முகாமையாளரால் தாம் பாலியல் பலாத்காரத் திற்கு உள்ளாகினர் என இரண்டு முன்னாள் ஊழியர்கள் முறைப்பாடு செய்தமையைத் தொடர்ந்து, பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

அவரது புகைப்படத்தை வெளியிட்ட பொலி ஸார் மேலும் பலர் இவரால் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனக் கவலை தெரிவித்துள்ளனர்.

